بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 05/03/2021 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**ஹஸ்ரத் உஸ்மான் பின் அஃப்பான் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுக்கு எதிராக எழுந்த குழப்பம் பற்றி ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

முஹம்மது பின் அபூபக்ர், முஹம்மது பின் ஹுஸைஃபா மற்றும் அம்மார் பின் யாஸர் ஆகிய இம்மூவரும் அந்த கிளர்ச்சியாளர்களின் பேச்சில் உடன்பட்டு விட்டார்கள். மேலும் அவர்களுடன் இணைந்து விட்டார்கள். இவர்களைத் தவிர மற்ற மதீனாவாசிகளுக்கு இந்த குழப்பவாதிகள் குறித்து எந்த கரிசனமும் இருக்கவில்லை. ஒவ்வொருவரும் இந்த குழப்பவாதிகளை சபித்துக் கொண்டுதான் இருந்தனர். ஆனால் அவர்கள் எவரது பழிச் சொல்லையும் பொருட்படுத்தவில்லை. அந்த எதிரிகள் 20 நாள்கள் வரை பேச்சளவில் முயற்சி செய்து வந்தனர். எவ்வாறாவது ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் கிலாஃபத்தில் இருந்து பதவி விலகி விட வேண்டும் என்று முயற்சித்தனர். ஆனால் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) இதை முற்றிலும் மறுத்து விட்டார்கள். எந்த மேலங்கியை இறைவன் எனக்கு அணிவித்தானோ அதனை என்னால் கழற்றவும் முடியாது. ஒருவர் தமது விருப்பத்திற்கேற்ப பிறர் மீது அநீதி செய்யும் வகையில் முஹம்மதிய உம்மத்தை ஆதரவற்ற முறையில் விட்டுவிடவும் முடியாது என்று கூறினார்கள். இந்தக் குழப்பத்திலிருந்து வெளியேறுமாறு ஹஸ்ரத் உஸ்மான் அம்மக்களுக்கு புரிய வைத்துக் கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் உஸ்மான் கூறினார்கள்: இன்று இம்மக்கள் குழப்பம் செய்கிறார்கள்; எனது வாழ்வு அவர்களுக்கு நிம்மதி இழக்கச் செய்கிறது. நான் இல்லாமல் போகும்போது, அந்தோ! உஸ்மானுடைய வாழ்வின் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு ஆண்டாக மாறி இருக்கக் கூடாதா? அவர் விரைவாக நம்மை விட்டு விடை பெறாமல் இருந்திருப்பார்களே! என்று உணர்வர். ஏனெனில் எனக்குப் பிறகு கடும் இரத்த சேதம் ஏற்படும். உரிமைகள் பறிக்கப்படும். நிர்வாகம் தலைகீழாகி விடும்.

இந்த வகையில் பனூ உமைய்யாக்களின் காலத்தில் கிலாஃபத் ஒரு அரசாட்சியாக மாறியது. அந்த அநீதியாளர்களுக்கு எத்தகைய தண்டனை கிடைத்தது எனில் அவர்கள் கிளர்ச்சி என்றால் என்ன என்பதையே மறந்து விட்டனர். எவ்வாறிருப்பினும் 20 நாட்கள் கழிந்த பிறகு அந்த கிளர்ச்சியாளர்களுக்கு ஓர் எண்ணம் ஏற்பட்டது. உடனடியாக ஏதாவது முடிவு செய்ய வேண்டும்; அதுவன்றி மற்ற மாநிலங்களிலிருந்து படைகள் வந்து விட்டால் நாம் நமது செயல்களுக்கான தண்டனையை அனுபவிக்க வேண்டி வரும் என்று கருதினர். எனவே ஹஸ்ரத் உஸ்மான் அவர்களை வீட்டை விட்டு வெளியேறுவதை தடுத்து விட்டனர். உணவு, பானம் உள்ளே செல்வதையும் தடுத்து விட்டனர். இதனால் நிர்பந்தத்திற்குள்ளாகி ஹஸ்ரத் உஸ்மான் நமது வேண்டுகோளை ஏற்பார் என்று கருதினர். 'அல்லாஹ் அணிவித்த இந்த மேலங்கியை நான் எவ்வாறு கழற்ற முடியும்?' என்று அன்னார் கூறிவிட்டார்கள்.

எவ்வாறிருப்பினும் மதீனாவின் நிர்வாகம் இம்மக்களின் கையில்தான் இருந்தது. இவர்கள் ஒன்றிணைந்து எகிப்திய படைத் தளபதியான ஃகாஃபிகியை தமது தலைவராக

ஏற்றுக் கொண்டிருந்தனர். இந்த குழப்பத்தின் வேர் எகிப்து ஆகும் என்பது இதிலிருந்து நிரூபணமாகிவிட்டது. அங்கு அப்துல்லாஹ் பின் சபா (பின்னால்) வேலை செய்து கொண்டிருந்தான். இவர்கள் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) உடைய வீட்டை முற்றுகையிட்ட பிறகு பிற மக்கள் மீதும் கடுமை காட்ட ஆரம்பித்துவிட்டனர். மதீனா அமைதி நகரமாக இருப்பதற்கு பகரமாக போர் நகரமாக மாறியிருந்தது. மதீனாவாசிகளின் கண்ணியம், மரியாதை அபாயத்தில் இருந்தது. எந்த மனிதரும் ஆயுதமின்றி வீட்டை விட்டு வெளியே வர முடியாத நிலை ஏற்பட்டு விட்டது. எவராவது கிளர்ச்சியாளர்களை எதிர்த்தால் அவரை இவர்கள் கொலை செய்பவர்களாக இருந்தனர். இவர்கள் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களை முற்றுகையிட்ட போது, தண்ணீர் கூட உள்ளே செல்லவிடாமல் தடுத்தபோது, ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் தமது அண்டை வீட்டு சிறுவனை ஹஸ்ரத் அலீ, ஹஸ்ரத் தல்ஹா, ஹஸ்ரத் ஸுபைர் மற்றும் உம்மஹாத்துல் முஃமினீன் - நம்பிக்கை கொண்டோரின் அன்னையர்களிடம் அனுப்பினார்கள். இந்த கிளர்ச்சியாளர்கள் தண்ணீர் கூட வர விடாமல் தடுத்து விட்டனர். உங்களால் முடிந்தால் ஏதாவது முயற்சி செய்யுங்கள். எங்களுக்கு தண்ணீர் வர செய்யுங்கள் என்று கூறி அனுப்பினார். ஆண்களில் எல்லோருக்கும் முதலில் ஹஸ்ரத் அலீ வந்தார்கள். கிளர்ச்சியாளர்களுக்கு புரிய வைத்தார்கள். நீங்கள் என்ன நடைமுறை காட்ட முயல்கிறீர்கள்? உங்கள் செயல்கள் நம்பிக்கையாளர்களின் செயலாகவும் இல்லை. காஃபிர்களின் செயலாகவும் இல்லை. ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுடைய வீட்டுக்கு உணவு, தண்ணீர் செல்வதை தடுக்க வேண்டாம். ரோம, பாரசீக மக்கள் கூட கைது செய்யும் போது உணவும் தண்ணீரும் தருகிறார்கள். இஸ்லாமிய நடைமுறைக்கு ஏற்ப பார்ப்பதாயின் உங்கள் செயல் ஒருபோதும் ஆகுமானது இல்லை. ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) உங்களுக்கு என்ன கெடுதல் செய்தார்? எதன் அடிப்படையில் அவரை கொல்வதையும், சிறை பிடிப்பதையும் உங்களுக்கு அனுமதிக்கப்பட்டதாக கருதுகிறீர்கள் என்று கேட்டார்கள். ஹஸ்ரத் அலீயின் இந்த போதனை அவர்களிடம் எந்த தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை. என்ன நடந்தாலும் சரி! அந்த மனிதருக்கு உணவு தண்ணீர் சென்று சேர விடமாட்டோம் என்று அவர்கள் தெளிவாக கூறி விட்டனர். இந்த பதிலை அவர்கள் எத்தகைய ஒரு மனிதரைப் பார்த்து கூறி இருந்தார்கள் எனில், அம்மக்கள் அவரை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் உண்மையான பிரதிநிதியாக கருதினார்கள்.

கிளர்ச்சியாளர்கள் மென்மையாய் புரிய மாட்டார்கள் என்று ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் புரிந்து கொண்டார்கள். ஆகவே அனைத்து மாநிலங்களின் ஆளுநர்களுக்கும் ஒரு கடிதம் எழுதி அனுப்பி வைத்தார்கள். அதன் சுருக்கமாவது, ஹஸ்ரத் அபூபக்ர் மற்றும் ஹஸ்ரத் உமருக்குப் பிறகு எனது எந்த விருப்பமோ கோரிக்கையோ அன்றி கிலாஃபத் பற்றி ஆலோசனை தரும் மக்களுடன் நான் இணைக்கப்பட்டேன். நான் விரும்பாமலும், கூறாமலும் கிலாஃபத்திற்காக நான் தேர்ந்தெடுக்கப்பட்டேன். எனக்கு முந்தைய கலீஃபாக்கள் செய்து வந்தது போன்று நான் அப்பணியை தொடர்ந்து செய்து வந்தேன். நான் என் சார்பாக எந்த பித்அத்தும் சுயமாக திணிக்கவில்லை. ஆனால் சிலரது உள்ளத்தில் தீமையின் விதை விதைக்கப்பட்டுள்ளது. விஷமம் வேரூன்றியுள்ளது. அவர்கள் எனக்கு எதிராக திட்டமிட ஆரம்பித்தனர். மக்களின் முன் ஒன்றை வெளிப்படுத்துகின்றனர்; உள்ளத்தில் வேறு ஒன்றை வைத்து இருக்கின்றனர். அவர்கள் என்மீது அவதூறு கூற ஆரம்பித்துவிட்டனர். முந்தைய கலீஃபாக்களின் மீதும் அது பொருந்தும். ஆனால் தெரிந்தும் நான் அமைதியாக இருந்தேன். ஆனால் இவர்கள் எனது கருணையிலிருந்து தகாத பயன் பெற்றவாரு விஷமத்தில் மேலும் முன்னேறினர். இறுதியில் நிராகரிப்பவர்கள் போன்று மதீனாவின் மீது தாக்குதல் தொடுத்தனர். ஆகவே இன்று மக்கள் எதையாவது செய்ய முடிந்தால் உதவி கிடைக்க ஏற்பாடு செய்யுங்கள் என்று எழுதி இருந்தார்கள்.

இதுபோன்ற கடிதமொன்றை ஹஜ்ஜுக்கு வந்தவர்களின் பெயரில் அனுப்பினார்கள். அதன் சுருக்கமாவது, நான் உங்களுக்கு இறைவன் பெயரால் கவனமூட்டுகிறேன். அவனது வெகுமதிகளை நினைவூட்டுகிறேன். இப்போது சிலர் குழப்பம் விளைவிக்கிறார்கள்.

இஸ்லாத்தில் பிரிவினையை ஏற்படுத்துவதில் மூழ்கியுள்ளனர். கலீஃபாவை இறைவனே உருவாக்குகிறான் என்பதைக் கூட இவர்கள் சிந்திக்கவில்லை. என்மீது அவதூறு கூறக்கூடிய மக்களுடைய விஷயங்களை அவர்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர். திருக்குர்ஆனின் இந்த கட்டளையை அவர்கள் பொருட்படுத்தவில்லை. يَاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْٓا اِنْ جَآءَكُمْ فَاسِقٌۢ بِنَبَاٍ فَتَبَيَّنُوْٓا **'நம்பிக்கை கொண்டவர்களே! தீயவர் ஒருவர் உங்களிடம் ஒரு முக்கிய செய்தியை கொண்டு வந்தால் அதை ஆய்வு செய்க.' (திருக்குர்ஆன் 49:7)**

அவர்கள் என்னிடம் செய்த பைஅத்தை மதிக்கவில்லை. அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைக் குறித்து கூறுகிறான்: اِنَّ الَّذِيْنَ يُبَايِعُوْنَكَ اِنَّمَا يُبَايِعُوْنَ اللّٰهَ 'எவர்கள் உம்மிடம் பைஅத் செய்கிறார்களோ அவர்கள் அல்லாஹ்விடமே பைஅத் செய்கிறார்கள்.' **(திருக்குர்ஆன் 48:11)**

நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய உதவியாளன் ஆவேன். எந்த சமுதாயமும் தலைவன் இன்றி முன்னேற முடியாது. எந்த இமாமும் இல்லையெனில் ஜமாஅத்தின் அனைத்து பணிகளும் வீணாகிவிடும். இவர்கள் இஸ்லாமிய சமுதாயத்தை அழிக்க நினைக்கிறார்கள். இதைத் தவிர இவர்களுக்கு வேறு எந்த நோக்கமும் இல்லை. ஏனெனில் நான் இவர்களின் பேச்சை ஒப்புக்கொண்டு அதிகாரிகளை மாற்றி விடுவதாக வாக்குறுதி வழங்கினேன். இருந்தும் இவர்கள் விஷமங்களை விடவில்லை. தற்போது இவர்கள் மூன்று விஷயங்களில் ஒன்றை ஏற்குமாறு கூறுகின்றனர். ஒன்று, எனது கிலாஃபத் காலத்தில் எவர்களுக்கெல்லாம் தண்டனை கிடைத்ததோ அவர்கள் அனைவருக்கும் என் மூலம் பழி வாங்கப்பட வேண்டும் என்கின்றனர். இதற்கு நான் ஒப்புக் கொள்ளவில்லையெனில், நான் கிலாஃபத்தை விட்டு விலக வேண்டுமாம். இவர்கள் என் இடத்தில் வேறு ஒருவரை நியமிப்பார்களாம். இதனையும் நான் ஏற்காவிட்டால், இவர்களின் ஒத்த கருத்து கொண்டவர்களை எனக்கு கட்டுப்படுவதிலிருந்து விலகுமாறு தூது அனுப்புவோம் என்று இவர்கள் மிரட்டுகிறார்கள்.

முதல் கோரிக்கைக்கு பதிலாவது, எனக்கு முந்தைய கலீஃபாக்களும் முடிவெடுப்பதில் தவறு செய்துள்ளனர். அவர்களுக்கு ஒருபோதும் தண்டனை தரப்பட்டதில்லை. இதன் பொருள் நீங்கள் என்னை கொல்ல விரும்புகிறீர்கள் என்பது மட்டுமேயாகும்.

கிலாஃபத்திலிருந்து விலகிக் கொள்வது குறித்து பதில் என்னவெனில், இவர்கள் எனது சதைகளை கொய்து எடுத்து என்னுடைய எழும்புகளை எடுத்தாலும் சரி! நான் கிலாஃபத்தை விட்டு விலகுவதை ஒப்புக்கொள்ள மாட்டேன்.

மூன்றாவது கோரிக்கை, இவர்கள் தம் மக்களை நாலாபுறமும் அனுப்பி எவரும் என்னுடைய விஷயத்தை ஏற்றுக் ஏற்றுக்கொள்ளாமல் செய்துவிடுவார்கள் என்பதாகும். இதற்கான பதில், இறைவனிடத்தில் நான் இதற்கு பொறுப்பாளி கிடையாது. எவராவது ஒப்பந்தத்தை முறிக்க நினைத்தால் நான் அவர்களின் செயலில் திருப்தி கொள்ள மாட்டேன்; இறைவனும் திருப்தி கொள்ள மாட்டான்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: ஹஜ்ஜின் நாள் நெருங்கி வந்தது. மக்கள் நாலா பக்கத்திலிருந்தும் மக்காவில் ஒன்றுகூட தொடங்கினர். இந்த கிளர்ச்சியாளர்கள் அங்கும் ஏதாவது குழப்பம் ஏற்படுத்தி விடக்கூடாது என்ற எண்ணத்தில் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அப்பாஸ் அவர்களே ஹஜ்ஜின் அமீராக நியமித்து அனுப்பி வைத்தார்கள். ஹஸ்ரத் உஸ்மான் மேற்கூறப்பட்ட கடிதத்தை அன்னார் மூலமே அனுப்பினார்கள். இந்த கடிதங்கள் குறித்து குழப்பவாதிகளுக்கு தெரிய வந்த போது அவர்கள் இன்னும் அதிகம் கடுமை காட்ட தொடங்கினர். இதனால் சண்டையைத் தொடங்க ஏதாவது சாக்கு கிடைக்குமா என்று தேடினர். அதனை வைத்து ஹஸ்ரத் உஸ்மானை ஷஹீதாக்க விரும்பினர். ஆனால் அவர்களின் எல்லா முயற்சிகளும் வீணாகின. அந்த கிளர்ச்சியாளர்கள் தீங்கு செய்வதற்கான எந்த சந்தர்ப்பத்தையும் ஹஸ்ரத் உஸ்மான் அவர்கள் வழங்கவில்லை. இறுதியில் நெருக்கடியால் ஒரு முடிவுக்கு வந்தனர்.

இரவானதும் அவர்கள் ஹஸ்ரத் உஸ்மான் அவர்களின் வீட்டின் மீது கல் எறிந்தனர். இவ்வாறு அவர்களுக்கும் ஆவேசம் வந்து கல் எறிந்தால் மக்களிடமும், பாருங்கள்! அவர்கள் எங்கள் மீது தாக்குதல் தொடுத்தார்கள் என்று கூறலாம் என்று திட்டமிட்டனர். ஆனால் ஹஸ்ரத் உஸ்மான் அவர்கள் பதிலடி கொடுப்பதை விட்டும் தம் வீட்டில் உள்ள அனைவரையும் தடுத்துவிட்டார்கள்.

சஹாபாக்களை ஹஸ்ரத் உஸ்மான் அவர்களிடத்தில் ஒன்று சேர அவர்கள் விடவில்லை. இருந்தும் சஹாபாக்கள் தமது கடமையில் இருந்து தவறவில்லை. வயதானவர்கள் ஆகவும், அவர்களின் தாக்கம் மக்களிடம் அதிகமாகவும் இருக்கக்கூடிய சஹாபாக்கள் தமது நேரத்தை மக்களுக்கு புரிய வைக்கும் பணியில் செலவழித்தனர். இளைஞர்கள் ஆகவும், முன்னவர்கள் போன்று தாக்கம் இல்லாதவர்களாகவும் இருப்பவர்கள் ஹஸ்ரத் உஸ்மானை பாதுகாக்க முயன்றனர். அன்னாருடைய உயிரை காப்பாற்றும் பயனற்ற முயற்சியில் சஹாபாக்களுடைய உயிர்கள் போய் விடக்கூடாது என்று ஹஸ்ரத் உஸ்மான் விரும்பினார். இவர்களுடன் நீங்கள் சண்டையிட வேண்டாம் என ஹஸ்ரத் உஸ்மான் அவர்கள் எல்லாரிடமும் இதனையே கூறினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அண்மையைப் பெற்ற ஜமாஅத் வருங்காலத்தில் எழும் குழப்பத்தை அகற்ற பாதுகாப்பாக இருக்க வேண்டும் என விரும்பினார்கள்.

கிளர்ச்சியாளர்கள் உஸ்மானின் மீது தாக்குதல் தொடுக்கக் கூடிய அந்த நேரமும் வந்துவிட்டது. ஏனெனில் உள்ளத்தை உலுக்கக் கூடிய தூதுச் செய்தியை ஹஜ்ஜில் ஒன்று சேரும் முஸ்லிம்களுக்காக ஹஸ்ரத் உஸ்மான் அனுப்பி இருந்தார்கள். அது ஹாஜிகளின் முன் வாசிக்கப்பட்டு விட்டது. மக்கா பள்ளத்தாக்கின் ஒரு முனையிலிருந்து மறு முனை வரை அதன் குரல் எதிரொலித்துக் கொண்டிருந்தது. ஹஜ்ஜுக்காக வந்த முஸ்லிம்கள் அது முடிந்ததும் ஜிஹாத் உடைய நற்கூலியை இழக்கவும் விரும்பவில்லை. எகிப்தைச் சேர்ந்த குழப்பவாதிகளையும் அவர்களின் தோழர்களையும் ஒழித்தே தீருவோம் என்று முடிவெடுத்தனர். குழப்பவாதிகளின் ஒற்றர்கள் முஸ்லிம்களின் நாட்டம் குறித்து குழப்பவாதிகளுக்கு தகவல் அளித்தனர். இச்செய்தி அவர்களின் கூடாரத்தை ஆட்டம் காணச் செய்தது. தற்போது கலீஃபாவை கொலை செய்வதைத் தவிர வேறு வழி இல்லை. நாம் இவரை கொல்லவில்லை என்றால் முஸ்லிம்களின் கையால் கொலை செய்யப்பட்டு விடுவோம் என இதுகுறித்து அவர்களிடத்தில் பெரும் விவாதம் ஏற்பட்டது. அந்த கிளர்ச்சியாளர்கள் ஹஸ்ரத் உஸ்மானை கொலை செய்வதற்காக அவருடைய வீட்டை தாக்கி பலவந்தமாக உள்ளே நுழைய விரும்பினர். சஹாபாக்கள் எதிர்த்து நின்றனர். கடும் சண்டை ஏற்பட்டது. ஹஸ்ரத் உஸ்மானுக்கு சண்டையை பற்றி தெரிய வந்ததும் சஹாபாக்களை சண்டையிட வேண்டாம் என்று தடுத்தார்கள். ஆனால் சஹாபாக்கள் ஹஸ்ரத் உஸ்மான் அவர்களை தனியாக விட்டுச் செல்வது ஈமானுக்கு மாற்றமானது என்றும், கீழ்படும் கட்டளைக்கு எதிரானது என்றும் கருதினர். இறுதியில் ஹஸ்ரத் உஸ்மான் அவர்கள் வெளியில் வந்து சஹாபாக்களை தமது வீட்டுக்குள் அழைத்துச் சென்றார்கள். அனைத்து சஹாபாக்கள் மற்றும் அவர்களின் உதவியாளர்களிடத்தில், மறுமையின் பொருள்களை ஒன்று திரட்டுங்கள் என்று வலியுறுத்தினார்கள். என்னை சந்திக்க விடாமல் தடுக்கப்பட்ட அந்தச் சஹாபாக்களையும் அழைத்து வாருங்கள் என்று கூறினார்கள். மக்கள் அனைவரும் ஒன்று கூடிய பிறகு அன்னார் வீட்டினுடைய மதில் மேல் ஏறி, எனக்கு அருகில் வாருங்கள் என்று கூறினார்கள். அனைவரும் அருகில் வந்தவுடன், மக்களே! அமருங்கள் என்றார்கள். சஹாபாக்களும் அமர்ந்தனர்; கிளர்ச்சியாளர்களும் சபையின் தாக்கத்திற்கு உள்ளாகியவாறு அமர்ந்தனர். எல்லாரும் அமர்ந்ததும், **மதீனாவாசிகளே! நான் உங்களை இறைவனிடம் ஒப்படைக்கிறேன். மேலும் அவன் எனக்கு பிறகு உங்களுக்கு கிலாஃபத்திற்காக வேறு சிறந்த ஏற்பாட்டை செய்யட்டுமாக என்று துஆ செய்கிறேன். இன்றைக்கு பிறகு இறைவன் என்னைக் குறித்து ஒரு தீர்மானம் எடுக்காதவரை நான் வெளியே வர மாட்டேன். மார்க்கத்திலும், உலகிலும் உங்கள் மீது ஆட்சி செய்ய எவருக்கும் உரிமை வழங்கிச் செல்ல**

**மாட்டேன். இறைவன் தன் வேலைக்கு எவரை விரும்புகிறானோ அவரை தேர்ந்தெடுக்கும் பொருட்டு இந்த விஷயத்தை நான் இறைவனிடமே விட்டுச் செல்கிறேன்** என்றார்கள். பிறகு அன்னார் சஹாபாக்கள் மற்றும் மதீனாவாசிகளுக்கு சத்தியமிட்டு கூறினார்கள்: **'என்னை பாதுகாப்பதற்காக உங்கள் உயிரை பெரும் ஆபத்தில் போட வேண்டாம். நீங்கள் உங்கள் வீட்டிற்கு செல்லுங்கள்.'**

**இந்த கட்டளைக்குப் பிறகும் ஹஸ்ரத் அலீ, ஹஸ்ரத் தல்ஹா, ஹஸ்ரத் ஸுபைர் ஆகியோரின் மகன்கள் தம்முடைய தந்தையின் கட்டளைக்கு உட்பட்டு அன்னாருடைய வீட்டு வாசலிலேயே முகாமிட்டிருந்தனர். மேலும் தம்முடைய வாள்களை உறையில் இடவில்லை.**

*ஹுஸூர் அவர்கள் பாகிஸ்தான் மற்றும் அல்ஜீரியா உடைய அஹ்மதிகளுக்காக துஆ செய்யும்படி கூறினார்கள்.*

*குத்பாவின் இறுதியில் ஹுஸூர் அவர்கள், காக்கநாடு ஜமாஅத், எர்ணாகுளம் மாவட்டம், கேரளாவைச் சார்ந்தவர் மாஸ்டர் B.M. முஹம்மது சாஹிப் மர்ஹூம் அவர்களின் மகன் மதிப்பிற்குரிய மவ்லவி முஹம்மது நஜீப் கான் சாஹிப் அவர்களின் நற்குறிப்பை எடுத்துரைத்தார்கள். பிப்ரவரி 14 அன்று இவர் மரணமடைந்தார். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்.*

*அல்லாஹ்வுடைய அருளால் மர்ஹூம் மூஸியாக இருந்தார். இவர் தமக்கு பின்னால் தம்முடைய மனைவி மட்டுமின்றி மூன்று மகன்களை விட்டுச் சென்றுள்ளார். மூன்று மகன்களும் வக்ஃபே நவ் எனும் அருளுக்குரிய திட்டத்தில் இணைந்துள்ளார்கள். ஒரு மகன் ஜாமிஆ அஹ்மதிய்யாவில் படித்துக் கொண்டிருக்கிறார்.*

*மர்ஹூம் அவர்கள் பிறப்பு அஹ்மதி கிடையாது. மாறாக 17 ஆம் வயதில் மர்ஹூம் தமது தந்தை மூலமாக அஹ்மதிய்யா ஜமாஅத்தின் அறிமுகம் கிடைத்தது. ஆகவே ஜமாஅத்தினுடைய பிரசுரங்கள் மற்றும் 'இஸ்லாமிய போதனைகளின் தத்துவ ஞானம்' எனும் நூலை படிக்க ஆரம்பித்தார். அப்பொழுது ஒரு நாள் தமது தந்தையிடம், ஒரு குழந்தை தம்முடைய எத்தனையாவது வயதில் சுயமாக தீர்மானம் எடுக்க முடியும்? என்று கேட்டார். அதற்கு மர்ஹூமுடைய தந்தை, ஒரு மனிதன் பதினேழு பதினெட்டு வயதில் சுயமாக முடிவெடுக்கலாம் என்றார். அதன்பிறகு மர்ஹூம் அவர்கள் மௌலானா முஹம்மது அலவீ சாஹிப் மூலமாக பைஅத் செய்து ஜமாஅத்தில் இணைந்து விட்டார்........*

*பைஅத்திற்குப் பிறகு மர்ஹூம் அவர்கள் ஒரு கனவின் அடிப்படையில் ஜாமிஆ அஹ்மதிய்யாவில் சேர்ந்தார். முதலில் சண்டீகரிலும் பிறகு பல்வேறு பகுதிகளிலும் முபல்லிக் ஆக பணியாற்றினார்கள். பிறகு நான் அவரை நாயிப் நாஸிர் தஃவதே இலல்லாஹ்வாக நியமித்தேன். அவ்வாறே நாயிப் இஞ்சார்ஜ் ஷுஅபா நூருல் இஸ்லாத்தில் நல்ல முறையில் பணியாற்றி வந்தார். அன்னார் தொழுகை நோன்பை முறையாக பேணக் கூடியவராக இருந்தார்கள். தஹஜ்ஜுத் தொழக் கூடியவராகவும், கிலாஃபத்துடன் உண்மையான தொடர்பு கொண்டவராகவும், விசுவாசம், உண்மையான நேசம் மற்றும் பற்றை கொண்டவராக இருந்தார். ஒவ்வொரு பணியையும் கலப்பற்ற தன்மையுடன் மிகவும் நிதானமாக, நேர்த்தியாக குறித்த நேரத்தில் செய்து முடித்து விடுவார். ஜமாஅத்தினுடைய நூல்களை மலையாள மொழியில் மொழியாக்கம் செய்திருக்கிறார். மொழியாக்கம் செய்யப்பட்ட நூல்களை ரிவ்யூ மற்றும் சரிபார்க்கும் பணியையும் செய்யக்கூடிய நல்வாய்ப்பும் பெற்றிருக்கிறார். அல்லாஹ் மர்ஹூமுடைய அந்தஸ்துகளை உயர்த்துவாயாக!*

*மேலும் ஹுஸூர் அவர்கள் சில மர்ஹூம்களின் நற்குறிப்பை எடுத்துரைத்தார்கள். ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு அவர்களின் ஜனாஸா காயிப் தொழுகையையும் தொழ வைத்தார்கள்.*

(தமிழாக்கம்: முஅல்லிம் M. நிஸாமுத்தீன்)